ஒரிசா—பீகார் போலீஸ் ஊடுருவல்!

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா	சென்னை: ஆடிமீ 8உ வெள்ளி (23—7—54)		மலர்: 2
இலங்கையில் 10 சதம்	வெளியூர்: ஆடிமீ 9உ சனி (24—7—54)		இதழ்: 34

கிராம சுகாதார நிலையத்தில் சோதனை!

சில பொருட்களைக் கைப்பற்றிச் சென்றனர்!

நிலைய அதிகாரிகளை மேல் அதிகாரிகளுடன் பேச அனுமதிக்கவில்லை!

பாரிபடா (ஒரிசா) ஜூலை 21—

ஒரிசா எல்லைக்குள் தக்க உடுப்புகளுடனும், சாதாரண உடை உடுத்திக்கொண்டும், பீகார் போலீஸ் துறையைச் சேர்ந்த சிலர், கரங்களில் சிறு துப்பாக்கிகளை ஏந்திக் கொண்டு ஊடுருவிச் சென்றனர்.

பீகார்—ஒரிசா எல்லையோரத்தில் மூன்று கல் தொலைவில் ஒரிசாவைச் சார்ந்த திரில் என்ற சிற்றூரில் உள்ள கிராம சுகாதார நிலையத்தை முற்றுகையிட்டு, பீகார் போலீஸ் படையினர் சோதித்தனர்.

குறிப்பிட்ட கிராம சுகாதார நிலையம், பீகாருடன் இணைந்திருந்த மயூர்பஞ்சு பகுதி ஒரிசாவுடன் இணைக்கப்பட்ட பிறகு, ஒரிசா சர்க்காரால் அமைக்கப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வருகிறது.

அந்நிலையத்தில் சர்க்கார் பணியாளர்களாக வேலை பார்த்துவந்த இரண்டு அதிகாரிகளையும், நிலையத்திலிருந்து வெளியே விரட்டிவிட்டதுடன், தங்களுடைய மாவட்ட அதிகாரிகளுக்குத் தகவல் அளிக்கவிடாமலும், அவர்களைத் தடுத்துவிட்டது படையெடுத்த பீகார் போலீஸ் படை!

மேற்படி சுகாதார நிலையத்தைச் சோதனையிடுவதற்கான மேல் அதிகாரிகள் கட்டளை எதையும், பீகார் போலீஸ் படை வைத்திருக்கவில்லை!

நிலையத்தை ஒரு மணி நேரம் சோதனையிட்டு, அங்கு கிடைத்த சில பொருட்களை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டது அப்போலீஸ் படை!

கைப்பற்றி எடுத்துக்கொண்டு சென்ற பொருட்களின் விவரத்தைக் குறிக்கவும், நிலைய அதிகாரிகள் அனுமதிக்கப்படவில்லை! பீகார் போலீஸ் படையில் எவர் எவர் இருந்தனர் என்பதை அடையாளம் கூற முடியாமலும் போய்விட்டது!

இந்தி எதிர்க்கப்படுவது ஏன்?

'இந்தியா' என்ற அரசியல் அங்கம் எப்பொழுது உருவாயிற்று?

டாக்டர் ரகுவீராவுடன் நமது நிருபர் உரையாடல்

டாக்டர் ரகுவீரா எம். ஏ., பி. எச்டி., டி. லீட், அவர்கள் அகில உலக, இந்திய கலாச்சாரக் கழக டைரெக்டர், டெல்லி மேல் சபை உறுப்பினருமாவார். அவர் 21—7—54-ல், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அலுவலகத்தில் பத்திரிகையாளரிடம், 'தமிழும் இந்தியும் தோளுடன் தோள் நின்று வளரவேண்டும்' என்னும் பொருள் பற்றி பேசுவதற்காக வந்திருந்தார். அன்று நமது 'நம் நாடு' அலுவலக நிருபர் அக் கூட்டத்தில் கலந்து கொண்டார். அன்று அந்த பத்திரிகையாளர் கூட்டம் எடுத்துக்கொண்ட பொருளில் முடிவேதும் காணப்படாத நிலையிலேயே முடிந்தது.

நமது 'நம் நாடு' திருப்திப்படுத்தப்பட்டால், தமிழகம் திருப்திப்படுத்தப்பட்ட மாதிரி. எனவே இந்த இளைஞரை திருப்தி செய்ய முயலுங்கள் என்று பம்பாய் 'டைம்ஸ் ஆப் இந்தியா' நிருபர் குறிப்பிட்டார். அதன்படி, டாக்டர் ரகுவீரா அவர்களை அவரது விருப்பப்படி 22—7—54 அன்று இரவு, அவர் தங்கி இருக்கிற கவர்னர் மாளிகையில் இரவு 9-30 மணி முதல் 11 மணி வரை 'நம் நாடு' நிருபர் சந்தித்து நடத்திய விவாதத்தின் விவரம் தரப்படுகிறது.

இந்தி, 1938-ல் இந்த நாட்டில் கட்டாயமாக்கப்பட்டபோது, அதற்கு மிகப் பலம் வாய்ந்த எதிர்ப்பு இருந்தது. இந்தி எதிர்ப்பில் இருவர் உயிர் பலியாகவும், ஆயிரக்கணக்கானவர் சிறைப்படவுமான நிலை அன்று ஏற்பட்டது.

ர. வீ.:—அன்று உங்கள் மீது இந்தியைத் திணித்த திரு. ராஜகோபாலாச்சாரி வடநாட்டுக்காரர் இல்லையே? உங்கள் நாட்டவர்தானே?

ப:—அந்த நிலையை நான் இன்னும் சற்று விளக்கமாக உங்கட்குச் சொன்னால் நல்லது என நினைக்கிறேன். திரு. ஆச்சாரியார், இந்த நாட்டில், மிகச் சிறுபான்மையினரான பார்ப்பனர்களின் தலைவர். பார்ப்பனர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுக் காலமாக இந்த நாட்டில் தங்களை உயர்ந்தவர்கள் என்று கூறிக்கொண்டு, இந்த நாட்டு மக்களை எல்லாம் பல சாதியினராய்ப் பிரித்து வைத்து, தங்களுக்கு சமுதாயத்தில் ஒரு நல்ல கௌரவமான இடத்தைத் தேடிக் கொண்டிருந்தனர். அந்த நிலையை மாற்றி, சமுதாயத்தில் எல்லோருக்கும் ஒரு சமமான நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காக எங்களின் சமீபகால மூதாதையர், பார்ப்பனரல்லாதார் இயக்கமாக, சுய மரியாதை இயக்கமாகவும் பணி புரிந்திருக்கிறார்கள். அந்த நிலையில் ஏற்கனவே இந்த நாட்டு மக்களின் உள்ளத்தில் இயற்கையாக எழுந்த வெறுப்பு உணர்விற்கு மாத்திரமாகி இருந்த பார்ப்பனர்களின் தலைவர் ஆச்சாரியார், வடநாட்டவரது விரோதத்தையும் தேடிக் கொள்ளக்கூடாது என்ற காரணத்திற்காக இந்தியைப் புகுத்தியிருக்கலாம். அந்த நிலையில் 1938-ல் இந்தியைப் புகுத்தியவர் இந்த நாட்டுக்காரரான ஆச்சாரியார்தானே என்ற காரணத்தால், இந்தி எதிர்ப்புக்கான அடிப்படையை எண்ணிப்பார்க்க மறுப்பது கூடாது.

ர. வீ.:—இங்குள்ள பார்ப்பனர்கள் எங்கள் வடநாட்டிற்கு வரும்போது, தாங்கள் பார்ப்பனர்கள் என்று கூறிக்கொள்வதில்லை. அப்படிக் கூறுவதில் அவர்களுக்கு விருப்பம் இருப்பதாகவும் தெரியவில்லையே? இங்கே மட்டும் ஏன் அப்படி?

ப:—நான் ஏற்கனவே குறிப்பிட்ட மாதிரி பார்ப்பனர்கள் தாங்கள் உயர்ந்தவர்கள் என்ற நிலையைப் போலிக் காரணங்களைக் காட்டி, இந்த நாட்டின் ஒரு கௌரவமான நிலையைப் பெற்றிருந்தனர்—இருந்தும் வருகின்றனர்—அந்த நிலைக்கு ஆபத்து வரும் காலை, அவர்கள் உங்களைப் போன்ற வடநாட்டவரிடம் வந்து பலரிடம் தேடும்போது, தங்களை எப்படி பார்ப்பனர்கள் என்று கூறிக்கொள்வார்கள்?

எனவே: இந்தத் தென்னாட்டில் இன்று இந்தி எதிர்க்கப்படுவதற்குக் காரணம் எல்லாம், தங்கள் தாய் மொழி பாதிக்கப்படும் என்பது மட்டுமல்ல. வடநாட்டவர் தென்னாட்டவரை அடக்கி ஆள்வதற்கு தந்திரமான ஒரு வழி தேடும் முறையில், ஆதிக்க மனப்பான்மையுடன் இந்தி புகுத்தப்படுகிறது என்ற நியாயமான அச்சம்கூட ஒரு காரணமாகும். இந்த அச்சம் நியாயமானதா இல்லையா என்பது தெளிவானாலன்றி, இந்தி இந்த நாட்டில் இடம் பெறலாமா கூடாதா என்ற கேள்விக்கு, நடைமுறையை ஒட்டிய பதில் கூறுவது சாத்தியமாகாது.

ர. வீ:- இந்தி உங்கள் மீது திணிக்கப்படுவதாகச் சொல்வதே தவறு. வடநாடு, தென்னாடு என்று ஏன் இந்தியாவை நீங்கள் பிரித்து பேசுகிறீர்கள்? வடநாடு தென்னாட்டின் மீது ஆதிக்கம் செய்வதாகச் சொல்வது எப்படி? இன்றைய அரசியல் சட்டப்படி, நம்மை நாமே ஆண்டுக் கொள்ளும்போது, ஒரு பகுதி இன்னொரு பகுதியை அடக்கி ஆள்கிறது என்று எப்படி நீங்கள் சொல்லுகிறீர்கள்?

ப:- இதற்கு நான் சற்று விளக்கமாகப் பதில் சொல்ல வேண்டியவனாயிருக்கிறேன். தென்னாடு, வடநாடு என்று பிரித்தும் பேசாமல் ஒன்றாக இந்தியா என்று நாம் எப்படிப் பேசுவது? இன்று வேண்டுமானால் 'இந்தியா' என்ற ஒரு அரசியல் அங்கம் இருக்கிறது. ஆனால் இந்த பரந்த உபகண்டம் முழுவதும், வெள்ளைக்கார ஆதிபத்தியத்திற்கு முன்னால் என்றுமே ஒரே ஆட்சியின் கீழ் இருந்ததா? இன்று மதிப்பிற்குரிய காங்கிரஸ் அரசாங்கம் ஆட்சிச் சின்னமாகத் தேர்ந்தெடுத்திருக்கிற சக்கரம் இருக்கிறதே, அந்தச் சக்கரத்தைக் கொண்டிருந்த அசோகனுக்குக் கூட தென்னாட்டில் ஆதிக்கம் இருக்கவில்லையே! அசோகன்தான் இந்திய உபகண்டத்தின் மிகப் பெரும் நிலப்பரப்பை ஆட்சி செய்தவன். அந்த மன்னனுக்கே இந்த தென்னாட்டில் ஆதிக்கம் இருக்கவில்லை என்று சரித்திரப் புத்தகத்தின் பக்கங்கள் நமக்குச் சொல்கின்றன. வெள்ளைக்கார ஆதிபத்தியம் மட்டும்தான் இந்த உபகண்டத்தை ஒரே குடையின்கீழ் ஆளமுடிந்தது என்றால் அதற்கும் காரணம், அதன் கையிலிருந்த துப்பாக்கி முனைதான். அப்படி வெள்ளையனின் துப்பாக்கி முனையில், ஆட்கொள்ளப்பட்ட பிரதேசங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. இன்று 1954-ல உள்ள 'இந்தியா' மட்டுமல்ல ஒரே ஆட்சியில் இருந்தது. ஆப்கனிஸ்தான், பர்மா, இலங்கை, பாக்கிஸ்தான் ஆகியவை உள்ளிட்ட பகுதிகளைத் தனது துப்பாக்கி வலிமையினாலும், இந்த நாட்டிலே நிலவியிருந்த ஒற்றுமையின்மையினாலும், ஒரே ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்து அதற்கு இந்திய யூனியன் எனப் பெயர் கொடுத்தான். 1919-ல் ஆப்கனிஸ்தானும், 1936-ல் பர்மாவும், 1947-ல் பாக்கிஸ்தானும் பலப் பல காரணங்களைக் காட்டி, தனித் தனி நாடுகளாகப் பிரிந்த ஒவ்வொரு நேரத்திலும் பிரிந்ததுபோக எஞ்சியிருந்த பகுதியை 'இந்தியா' இந்தியா என்றே அழைத்து வந்திருக்கிறார்கள், அப்படிப் பார்த்தால், சரித்திர ரீதியாக, இந்தியாவில் ஒற்றுமை எந்த ரூபத்திலும் இருக்கவில்லை. எனவே, வெள்ளைக்காரன் வரும்வரையில், தென்னாடு, தனிநாடாகவே இருந்து வந்திருக்கிறது. வெள்ளையன் வெளியேறிய பிறகும், அவனது ஆதிக்கம் அழிந்துபட்ட பிறகும் அவன் அமைத்துத் தந்து சென்ற ஒரு அரசியல் அமைப்பான, 'இந்தியா' என்ற பெயரைக் காட்டி, இப்பகுதியில் வாழ்பவர் எல்லாம் ஒரே மக்கள்; எல்லோரும் இந்தியர்கள் என்று சொல்வது, கடந்த கால சரித்திரத்தை மறந்துவிட்டு, சொல்லப்படுகிற வாதமில்லையா? ஆகவே, நாங்கள் சொல்கிறோம் தென்னாடு, வடநாட்டுடன் சேர்ந்திருக்கக் கூடாது. வேறு எந்தப் பகுதியுடனும், தென்னாட்டையும்

(4-ம் பக்கம் பார்க்க)

தூத்துக்குடி சதி வழக்கு

தூத்துக்குடி தி. மு. கழக தோழர்கள் கே. வீ. கே. சாமி, சிவசாமி, தங்கம் உள்பட இன்னும் 47 தோழர்கள் மீது தொடரப்பட்டுள்ள சதி வழக்கு விசாரணை ஆகஸ்ட் 9-ந்தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்ட 'செஷன்ஸ்' நீதி மன்றத்தில் விசாரிக்கப்படுகிற இந்த வழக்கை சர்க்கார் தரப்பில் நடத்த திரு. பி. எஸ். சுப்பிரமணிய பிள்ளை என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிகிறது.

நம் நாடு

தி.மு.க.தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 23—7—54 வெள்ளி

மூ'தேவி'யின் மூளைக் குழப்பம்!

மவுண்ட்ரோட் 'பாரத தேவி' எனும் மூ'தேவி', கொஞ்ச நாளாகக் குடும்பக் கவலையில் மூழ்கிப்போய்க்கிடக்கிறாள். இயற்கையிலேயே, அவள் மந்த புத்தி பெற்றிருந்தவள். சம்சார சாகரத்தில் மூழ்கி, மீள வகை காணாது, அதே சாகரத்தில் அமிழ்ந்துவிடுவோமோ அல்லது கரை யேறுவோமோ எனும் சஞ்சலத்தில் தவித்துக்கொண்டிருக்கிற அந்த மூ'தேவி'க்கு, மேலும் மூளைக் குழப்பம் ஏற்பட்டிருப்பதில் வியப்பில்லை!

பொதுமக்களின் கண்ணையும் கருத்தையும் கவர்ந்திடும் வகையில் இயற்கை முகப் பொலிவு மூ'தேவி'க்கு இருக்க முடியாது. அவள் ஜன்மம் எடுத்த காலத்திலிருந்தே அவள் முகம் அவலட்சணமாகத்தான் இருந்து வந்திருக்கிறது என்பதை அவள் வாழ்க்கை வரலாறு மெய்ப்பித்துக் காட்டுகிறது!

முகத்தில் கவர்ச்சி, கண்களின் ஒளி, சொல்லின் மதுரம், மூளையின் திறம், கருத்தின் தெளிவு ஆகிய, கற்றவரும் மற்றவரும் காமுறும் உயர் பண்புகள் எதுவும், பிறப்பிலும் உடன் பெற்று பிறவாது, பிற்கால வாழ்நாளிலும் அவைகளைப் பெற்றிடும் நல்வாய்ப்பும் பெறாது, அனவரதமும் பெருந் தீனி உண்டும், உண்ணுவது ஒழிந்த நேரத்தில் உறங்கிக்கிடப்பதையும், பெறுதற்கரிய வாழ்க்கைப் பெரும் பேறு எனக் கொண்டு, காலங் கழித்திடும் மவுண்ட்ரோட் மூ'தேவி'யின் கூற்றில், அறிவொளி வீசிடுமா செய்யும்? பிறவியிலேதான் மூ'தேவி' அப்பெரும் பண்புடன் பிறக்கவில்லாததை மன்னித்து விடலாமென்றாலும், குடியுள்ள வீட்டில், பிறந்து புகழ் பரப்பி வாழ்ந்து மறைந்துபோன இரு பெரும் எழில் அணங்குகள், தாங்கள் இருந்த காலத்தில் உமிழ்ந்த [illegible] அறிவுவளவாவது பெற்று மிளிர்க்க மவுண்ட்ரோட் மூ'தேவி' தவறிவிட்டிருப்பதை, நம்மால் மட்டுமல்ல வேறு எவரால்தான் மன்னிக்க முடியும்?

பிறர் நகைக்க இப்படிப் பிறக்க வேண்டும்? பிறந்தாலும் பிறந்தாள் பிறர் நகைக்கத்தான் பிறந்துவிட்டாளே மூ'தேவி', பிறர் சேவிக்கும் கனவான் குடும்ப ஆளாக வளர்ந்தாவது, உளறி வழியும் பழக்கத்தை வாயைத் திறக்காமல் வாழவாவது கற்றுக்கொள்ளக் கூடாதா? அடிக்கடி தன் அகோர வாயைத் திறந்து, குடலை முறுக்கும் மூக்கைத் துளைக்கும் சாக்கடை நாற்றத்தைத் தூவும், விபரீதச் செயலில் இறங்காமல் இருக்கும் அற்புத வித்தையையாவது, தம் வளர்ப்புத் தந்தையிடமிருந்து, மூ'தேவி' கற்றுக்கொண்டு இருக்கக் கூடாதா? அந்தப் பாம வித்தையில் அவர் தேர்ந்தவராக இருப்பதால் அல்லவா, அவரைப் போற்றுவதற்கு அறிஞர்கள் முன்வருவதில்லையானாலும் தூற்றுவதற்கு எவரும் அதிகமாக முன்வராமல் இருக்கிறார்கள்? தந்தையாரின் வாழ்க்கை வெற்றியில் பொதிந்து கிடக்கும் சூட்சமத்தைத் தெரிந்துகொண்டு, இனியாவது மூ'தேவி', தனக்கு விளங்காத விஷயத்தில் பேசாமடந்தையாகக் காலங்கழிப்பாளாக! நிற்க,

இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து திராவிட நாடு தனி நாடாகப் பிரிய வேண்டும் என நாம் கோருகிறோம். அதற்காக 'திராவிட நாடு திராவிடருக்கே' என முழங்குகிறோம்.

அரசியலில் டெல்லி ஆதிபத்தியத்தின் ஆதிக்கமும் பொருளாதாரத்தில் வடநாட்டு முதலாளிகளின் பிடிப்பும், மத சமூகத் துறைகளில் ஆரிய கலாசாரத்தின் அணைப்பும் கூடாது என நாம் கூறுகிறோம்.

நமது அடிப்படை இலட்சியம் மவுண்ட்ரோட் மூ'தேவிக்'குப் பிடித்தமானதாக இல்லாமல் இருக்கலாம். அதற்காக, நாம் அதைக் கண்டிக்கமாட்டோம்; குறை கூறவும் முன்வரோம். அதுவுமல்லாமல் நமது கோரிக்கையை, தக்கக் காரணங்கள் காட்டி, மறுத்துக் கூற மூ'தேவி' முனைந்தால், அதற்காக அவளுக்கு நன்றியும் செலுத்தும் நல்லியல்பு நமக்கு என்றும் உண்டு. ஆனால், அதை விடுத்து தொடர்பு சிறிதும் இல்லாத ஒரு சம்பவத்துடன், நமது கோரிக்கையை இணைத்து, நாம் திராவிடத் திருநாடு கேட்பதின் எதிரொலியாகத்தான், அந்தச் சோகச் சம்பவம் நடைபெறுகிறது என இட்டுக்கட்டி, அபாண்டமாக நம்மீது பழி சுமத்தக் கிளம்புவது என்றால், அதை நாம் ஒருக்காலும் பொறுத்துக்கொள்ள மாட்டோம்; விவாதத்திற்கு விஷயமறியாது புகுந்த வீணர்கள், விஷமிகள், வியர்க்க வியர்க்கத் தளத்தை விட்டு, விரண்டோடும் வரையில், விடமாட்டோம்; வெற்றி கிட்டும் வரை அறப்போர் புரிந்தே தீருவோம்.

நாம் திராவிட நாடு கேட்பதினால்தான், இலங்கையிலிருந்து தமிழர்கள் வெளியேற்றப்படுகிறார்கள் எனவும், இலங்கை சர்க்காரின் கோணல் போக்குக்கு திராவிட இயக்கத்தவர்கள்தான் முழுப் பொறுப்பேற்க வேண்டியவர்கள் எனவும், விஷ வித்தை விதைக்கிறது மவுண்ட்ரோட் மூ'தேவி'!

மூ'தேவி'யின் இக்கூற்றில் எந்த அளவு உண்மை இருக்கிறது என நாம் ஆராய்ந்து அறிவதற்கு முன்பாக, விவாதத்திற்காக அந்தக் கூற்று உண்மையானது என்றே ஒப்புக்கொண்டு, மூ'தேவி'யின் விடையை எதிர்நோக்கி, சில ஐயப்பாடுகளைக் கிளப்புகிறோம்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அரசியல் ஆதிக்கமும், பிரிட்டிஷார் பொருளாதார வேட்டையும், இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து அகல வேண்டும் என்ற குறிக்கோளுடன் 'வெள்ளையனே வெளியேறு' எனக் காங்கிரஸ் கட்சி முழங்கினதே, அதன் எதிரொலியாகத்தான், தங்கள் நாட்டில் உள்ள இந்தியத் தமிழர்களை வெளியேற்ற, சிலோன் சர்க்கார் முன்வந்து இருக்கிறது என எவராவது கூற வந்தால், அது மூ'தேவி'யின் விளக்கப்படி உண்மையானதாகத்தானே இருக்க முடியும்?

'வெள்ளையனே வெளியேறு' எனக் காங்கிரஸ் கிளப்பிய முழக்கத்தின் காரணமாகத்தான், அங்கு பல ஆண்டு காலமாகப் பாடுபட்டு உழைத்து வந்த இந்தியத் தமிழர்களுக்குத் தீங்கிழைக்கவும், அவர்களை வெளியே விரட்டவும் முன்வந்திருக்கிறது சிலோன் சர்க்கார் என நாம் கூறுகிறோம். காங்கிரஸ் முழங்கிய அந்த முழக்கத்திலிருந்துதான், அங்குள்ள இந்தியத் தமிழர்கள் மீது பகை பாராட்டவும், இம்சிக்கவும், அனாதைகளாக அவர்களைத் தாய்நாட்டுக்கு அனுப்பவுமான, புதிய கண்ணோட்டத்தைச், சிலோன் சர்க்கார் பெற்றது என நாம் குற்றஞ்சாட்டுகிறோம். முடியுமானால் மூ'தேவி' இதற்கு பதில் கூறட்டும்.

தென்னாப்பிரிக்காவில், நிறவெறி பிடித்த டாக்டர் மலான் சர்க்கார், அங்குள்ள தமிழர்கள் உள்பட இந்தியர் என்று அழைக்கப்படும் அனைவரையும், நாயினும் கீழாய் நடத்தியும், கொடுமை பல இழைத்தும் வருகிறதே, அதற்கு என்ன சமாதானம் சொல்ல இருக்கிறது மூ'தேவி'?

திராவிட நாடு பிரச்னையே கருக்கொள்ளாத காலத்திலேயே, பர்மாவில் தொழில் செய்து வந்தத் தமிழர்களையும், ஏழைத் தமிழ் உழைப்பாளிகளையும், கொன்று குவித்ததோடு மட்டுமல்லாமல், தேடிய சொத்தைப் பிடுங்கிக் கொண்டு, அலங்கோலத்தில் தமிழர்களைத் தாய் நாட்டுக்கு விரட்டியதே பர்மா, அதற்கு மூ'தேவி' கூற இருக்கிற சமாதானம் என்ன?

இவையனைத்தும் மிக மிகச் சிக்கலான பிரச்னைகளாக மூ'தேவி'க்கு இருக்கக்கூடும். எனவே, இவைகளுக்கு, பதில் கூறுவதென்பது, அதன் மூளை பலத்துக்கும் புறம்பானதாக இருந்தாலும் இருக்கலாம்!

எனவே, இந்தியத் துணைக் கண்டத்தில் நிகழ்ந்து வரும் சம்பவத்தைக் குறிப்பிடுகிறோம். அதற்காவது, மூ'தேவி' பதில் கூற முன்வரட்டும்.

மொழிவழி மாநில கோரிக்கையில், ஒவ்வொரு மொழியினரும் மற்றொரு மொழியினரை, வேறுநாட்டவர் போல் கொண்டு, ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்ளுகின்றனர் என்றும், ஒரு நாட்டவர் என்ற எண்ணம் இல்லாமல், வெவ்வேறு நாட்டவர் தங்களுக்குள் பகை பாராட்டிக் கொள்வது போன்று, இத்துறையில் பலரும் நடந்து கொள்ளுகின்றனர் என்றும், ஆசிய ஜோதியாம் காங்கிரஸ் மேலிடத்து மேலவர் பண்டிதர் சோகத்துடன் கூறியுள்ளாரே, அத்தகுநிலை 'இந்தியர்'களிடம் எப்படி ஏற்பட்டுவிட்டது என்பதற்கு மூ'தேவி' நல்லதோர் விளக்கம் தர வேண்டும்.

இந்தியத் துணைக் கண்டத்தில் காணப்படும் அந்த நிலைக்கும், நாம் திராவிடம் கேட்பதுதான் காரணம் என, அது, சமாதானம் கூற முன்வருமானால், அதை, உண்மை உள்ள கூற்றாக ஒருவரும் கொள்ளத் துணியார்!

வடக்கு—தெற்கு பேதம், இன்று நேற்று ஏற்பட்டதல்ல! இதிகாச காலம் முதற்கொண்டு, பண்டிதர் பதவி பெற்றுள்ள காலம் வரையில் உள்ள வரலாற்றுச் சுவடிகள், சோகம் நிறைந்த, அந்தத் தொடர் கதையைத்தான் தாங்கிக்கொண்டு இருக்கின்றன! திராவிட நாடு உருவாக்கப்படுவதில்தான், அந்தத் தொடர்கதையின் இறுதிக் கட்டம் இருக்கிறது.

26 சன்யாசிகள் கைது!

மடத்தில் போலீசார் சோதனை

18-7-54ல் கலியபோலா மடத்தில் போலீசாருக்கும்—சன்யாசிகளுக்கும் ஏற்பட்ட கலவரத்தையொட்டி கட்டாக் போலீசார் 26 சன்யாசிகளைக் கைது செய்துள்ளனர் என்று தெரிகிறது.

கலவரம் நடைபெற்றபோது மடத்தில் இருந்த எட்டு பெண்களைப் போலீசார் விசாரணைக்காக மாலை வரையில் மடத்திலேயே இருக்குமாறு செய்தனர். பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். அப்பெண்களில் ஒருவர் 18 வயதுடைய இளமங்கை என்று தெரிகிறது.

மடத்தின் அதிபரான பலபாபாவின் வலது கை போன்றவரும் சன்யாசிகளின் முக்கியமானவருமான பைரவி பாபா என்பவர் தற்கொலை செய்து கொள்ள முயற்சித்து கழுத்தில் காயங்களுடன் மருத்துவ விடுதியில் சேர்க்கப்பட்டிருக்கிறார் என்று தெரிகிறது.

கலவரத்தின்போது காயமுற்ற போலீசார் அறுவரில் நால்வர் குணமடைந்து விட்டனர் என்றும் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருக்கிறதென்றும் கூறப்படுகிறது.

தாழ்த்தப்பட்டோர் துயரம்!

பொது இடங்களில் செல்லத் தடை; வேலை கொடுக்க மறுக்கின்றனர்!

ஜாதி இந்துக்கள் செய்யும் கொடுமை

கலவரம் ஏற்படாது தடுக்க போலீஸ் படை

அகமதுநகர், ஜூலை 21—

ஜாதி இந்துக்கள்—தாழ்த்தப்பட்ட மக்களிடையே நிலவும் குரோத மனப்பான்மையைத் தடுக்கவும், கலவரம் ஏற்படாமல் பாதுகாக்கவும் அகமதுநகருக்கு பத்து மைல் தூரத்தில் உள்ள அசத்கயான் என்னும் கிராமத்திற்கு அகமது நகரிலிருந்து தனி போலீஸ் படை ஒன்று அனுப்பப்பட்டிருக்கிறதாம்.

அசத்கயான் கிராமத்தில், நான்கு மாத காலமாக ஜாதி இந்துக்களுக்கும்—தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இடையே பகைமை வளர்ந்து வந்தது என்று தெரிகிறது. ஜாதி இந்துக்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினரை நிலங்களில் வேலைக்கு வைத்துக் கொள்ள மறுக்கின்றனராம்; பொது சாலைகளிலும், இந்துக்களின் நிலங்களுக்குப் போகும் பாதைகளிலும், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் நடந்து செல்லக் கூடாது என்று தடுத்தனராம்.

தாழ்த்தப்பட்ட மக்கள், அகமதுநகர் கலெக்டர் இல்லத்திற்குச் சென்று, தங்கள் குறைகளைப் போக்கி, தங்களுக்கு தக்க பாதுகாப்புக்கான ஏற்பாடுகளைச் செய்யாவிடில், கலெக்டரின் இல்லத்தை விட்டு வெளியேற முடியாது என்று கூறிவிட்டனர்.

பின்னர் கலெக்டர் அசத்கயானுக்கு போலீஸ் படையை அனுப்பியதுடன், தாழ்த்தப்பட்ட மக்களைத் துன்புறுத்தக் கூடாது என இந்துக்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார் என்றும் தெரிகிறது.

நான்கு மாதங்களுக்கு முன்பு இந்துக்களின் எருமைகள் சிலவற்றிற்கு தாழ்த்தப்பட்ட மக்கள் விஷமிட்டதாகவும், அதன் காரணமாக இரு சாராரிடையேயும் பகைமை மூண்டுவிட்டதாகவும் தெரிகிறது.

தென் இந்தியாவில் மட்டுமே சிறிதளவு கம்யூனிசம் பரவி இருக்கிறது

வடக்கே அதிகமில்லை—பம்பாய் பிஷப்பின் கருத்து

"தென் இந்தியாவில், ஒரு குறிப்பிட்ட அளவு கம்யூனிசம் பரவியிருக்கிறது. ஆனால், பம்பாயைச் சுற்றிலும், தொழில் துறையில் முன்னேற்றம் அடைந்துள்ள பகுதிகளில் கம்யூனிசம் அதிகமாகக் காணப்படவில்லை; இது ஆச்சரியப்படக்கூடியதே,"

—என்று பம்பாய் பிஷப்பான ரெவரண்ட் வில்லியம் லாஷ் என்பவர் கூறியிருக்கிறார். இவர் மத சம்பந்தமான மாநாடொன்றில் கலந்துகொள்ள அமெரிக்கா வந்திருக்கிறார்.

அவர் மேலும் கூறியதாவது:—

உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் இளைஞர்களான திறமைசாலிகள் எல்லாம் கம்யூனிசத்தினின்றும் விலகிச் செல்கிறார்கள்; இந்திய உபகண்டத்தின் வாழ்க்கை முறைக்கும், அதன் சூழ்நிலைக்கும் கம்யூனிசம் தகுதி உடையது அல்ல என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள்."

இந்தோ - சீன துண்டாடப்பட்டது!

—— (:) ——

எட்டு ஆண்டுகள் நீடித்த கடும்போர் நின்றது!

உலக யுத்தம் மூளுவது தற்காலிகமாய் தவிர்க்கப்பட்டது

இந்தோ சீனாவில் கடந்த எட்டாண்டுக் காலமாக தொடர்ந்து நடைபெற்று வந்த போர், இன்று நின்றது. அதற்கான போர் நிறுத்த ஒப்பந்தம் ஜினிவாவில் நடைபெற்ற மாநாட்டில் ஏற்பட்டுள்ளது. வியட்நாம், லாவோஸ், கம்போடியா ஆகிய மூன்று ராஜ்யங்களிலும், போர் நிறுத்தம் செய்வது என்ற உடன்பாடு, மேற்கத்திய—கிழக்கத்திய தலைவர்களிடையே நேற்று ஏற்பட்டது.

வியட்நாம், லாவோஸ் ஆகிய இரு பெரும் ராஜ்யங்களிலும் போர் நிறுத்தத்திற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகிவிட்டது.

கடைசி நிமிடத்தில் ஏற்பட்ட சிறு முறிவுகளால், கம்போடியாவுக்கான ஒப்பந்தமும் அப்பொழுதே கையெழுத்தாக இயலாது போயிற்று.

என்றாலும் மறு நாள் காலையில், அந்த ஒப்பந்தமும் கையெழுத்தாகிவிடும்.

ஜினிவாவில் உள்ள பிரிட்டன் அலுவலகத்தில் பிரான்ஸ், பிரிட்டன், சோவியத் ரஷியா, வியட்மின், கம்போடியா ஆகிய நாடுகளின் தூதுக்குழுத் தலைவர்கள், அவசரக் கூட்டமொன்றில் இரவு 1-30 மணிக்கு மேல் கூடி, இந்த முடிவுகளை மேற்கொண்டனர்.

இந்தியா, போலந்து, கனடா ஆகிய நாடுகள் மேற்பார்வைக் குழுவில் இடம் பெற்றுள்ளன. இந்தியா தலைமை தாங்கும் அந்த மேற்பார்வைக் குழு, போர் நிறுத்தத்தைக் கண்காணிப்பதுடன் 1956, ஜூலைக்குள் நடைபெற வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ள தேர்தலையும், முன்னின்று நடத்தி வைக்கும் பொறுப்பை ஏற்கும் என்று தெரிகிறது.

ராணுவங்களை, போர் நிறுத்த எல்லையிலிருந்து தங்கள் பிரதேசங்களுக்குத் திரும்பப் பெறுவது போன்றவை எல்லாம் போர் நிறுத்தப்படுகிற தினத்திலிருந்து 10 மாதங்களுக்குள் செய்யப்பட்டுவிடும் எனத் தெரிகிறது.

ஹானோய் உட்பட வடக்கு வியட்நாம பகுதிகளை பிரெஞ்சுக்காரர்கள் காலி செய்ய வேண்டும் என முடிவேற்பட்டிருக்கிறது. ஹெய்பாங் துறைமுகத்தையும் 10 மாதங்களுக்குள் ஒப்படைத்துவிட வேண்டும் எனவும் முடிவாகி உள்ளது.

எந்தப் பிரிவும் அன்னிய இராணுவக் கூட்டுகளில் சேரக் கூடாது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த போர் நிறுத்தத்தைப் பாராட்டும் பொருட்டு சீனப் பிரதமர் சூ-என்-லாய், பிரெஞ்சுப் பிரதமர் மெண்டஸ் பிரான்சுக்கு தனது இல்லத்தில் விருந்தளித்தார். அதே போலவே சீனப் பிரதமருக்கும், பிரெஞ்சுப் பிரதமர் விருந்தளித்தார்.

இந்தப் போர் நிறுத்தத்தைத் தான் பதவி ஏற்ற ஒரே மாதத்தில் சாதிக்காவிட்டால் தமது பதவியை ராஜினாமாச் செய்து விடுவதாக பிரெஞ்சுப் பிரதமர் மெண்டஸ் பிரான்ஸ் ஒரு மாதத்திற்கு முன் பதவி ஏற்கையில் அறிவித்திருந்தார். அவர் கூறியபடி, இந்தோ-சீனப் போர் நிறுத்தம், அவர் பதவி ஏற்ற காலிலிருந்து ஒரு மாதம் கழித்து 90 நிமிடங்களுக்குப் பிறகு ஏற்பட்டது. அவர் இந்த வெகு சிரமமான போர் நிறுத்தத்திற்காக மிகவும் பாடுபட்டார். அவரது வெற்றியை எல்லா நாட்டு அங்கத்தினர்களும் ஜினிவா மாநாட்டில் பாராட்டியுள்ளனர்.

போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டபின்தான் பிரெஞ்சுப் பிரதமரின் மனம் நிம்மதி அடைந்தது. தான் பெற்ற வெற்றியை உடன் பிரெஞ்சு ஜனாதிபதி கோட்டிக்கு டெலிபோன் மூலம் அறிவித்தார்.

இந்தூரில் மாணவர்கள் கிளர்ச்சி!

போலீசார் துப்பாக்கிப் பிரயோகம்

8 பேர் கொல்லப்பட்டனர் பலருக்குப் படுகாயம்

3000 மாணவர்கள் ஊர்வலமாகச் சென்றனர்.

மத்ய பாரத் சர்க்கார் அலுவலகத்தை நெருங்கிற்று ஊர்வலம்.

போலீசார் இடைமறித்து ஊர்வலம் தொடர்ந்து செல்லாது தடுத்தனர்.

மாணவர் குழாம் கல்மாரி பெய்தது.

போலீசார் தடியடி, பின் கண்ணீர் புகை எல்லாம் பிரயோகித்துப் பார்த்தனர்.

மாணவர்களோ மும்முரமாக பிக்கல் கல்லால் தாக்குதலை போலீசார் மீது தொடர்ந்து நடத்தினர்.

உயர்நீதி மன்றத்தினுள் நுழைந்தனர். மேஜை நாற்காலிகளையும் உயர்நீதி மன்ற 'ரிகார்டு'களையும் தீயிட்டுக் கொளுத்தினர்.

இதைத் தடுக்க போலீசார் பல முறை துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கின்றனர்.

விளைவு.........

எட்டு பேர் கொல்லப்பட்டனர். பலருக்கு படுகாயம்.

போலீஸ் உதவி இன்ஸ்பெக்டர் ஜோஷியும் தாக்குதலுக்கு ஆளானார்.

மந்திரிகள், சர்க்கார் அதிகாரிகள் ஆகியோரின் கார்களுக்கு பலத்த சேதம்.

விசேஷ ஆயுதம் போலீசார் இந்தூர் நகர வீதிகளில் ரோந்து சுற்றிவருகின்றனர்.

72 மணி நேரத்திற்கு ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது.

இத்தனையும் எதற்குத் தெரியுமா?

இந்தூரில் உள்ள ஹோல்கார் கல்லூரியில் ஓய்வு பெற்றிருக்கும் தலைமை ஆசிரியர் எச். கோஷ் என்பவரை மீண்டும் கல்லூரியில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை நிறைவேற்றிக் கொள்ள—மாணவர்கள் செய்த கிளர்ச்சி.

ஆட்சியிலிருப்பதால் எதுவும் செய்வதென்பது கூடாது!

ஆற்றல் உள்ளவரே ஆட்சிபீடத்தில் இருக்க வேண்டும்

மக்களாட்சிபற்றி டாக்டர் லட்சுமணசாமி முதலியார்

"சென்ற 50 ஆண்டு காலத்தில், கல்வி அளிக்கப்பட்டதில் பல்கலைக் கழகங்கள் ஏராளமான பட்டதாரிகளை தயார் செய்திருக்கிறது. அதே நேரத்தில் இருட்டுக் காலத்திலேகூட நடைபெறாத பல கொடுமைகள் நாட்டிலே நிகழ்ந்திருக்கின்றன. பேச்சுரிமையின் எல்லை மீறப்பட்டிருக்கிறது.

மக்களாட்சி நடைபெறும் நாட்டில், கல்வியானது, சிறந்த முறையில் பயன் அளிக்க வேண்டுமென்றால், சரியான முறையில் கல்வி போதிக்கப்பட வேண்டும். மக்களிடையே, படித்தவர்கள் கல்வியறிவு இல்லாதவர்கள் என்ற வேறுபாடு இன்றி மக்களாட்சியின் சம்பிரதாயங்களையும், வாழ்க்கை முறையையும் பரவச் செய்து இளைஞர்களிடையே அப்பழக்கங்களை வேரூன்றச் செய்ய வேண்டும்.

—என்று டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார், கன்னிமாரா ஓட்டலில் நடைபெற்ற சென்னை ரோட்டரி கிளப்பின் 25-வது ஆண்டு விழாவில் பேசும்போது குறிப்பிட்டார்.

மக்களாட்சி பற்றி அவர் மேலும் கூறியதாவது:

"மக்களாட்சி பாதுகாக்கப்பட்டு அது சிறந்து விளங்க வேண்டுமென்றால் அதற்கு உள்ள எல்லைகளை மக்கள் உணரவேண்டும். ஒரு கட்சி அரசாட்சியில் இருக்கிறதென்ற ஒரே காரணத்திற்காகவே அவர்கள் விரும்பும் எதையும் செய்துவிடலாம் என்பது அல்ல."

"அதிகார போதை கொண்டவரும், கல்வி கற்றிருந்தும் பாதுகாப்பான முறைகளை எவ்வாறு சரியான முறையில் கையாள்வது என்பதை அறியாதோரும் இருப்பதால், ஒரு நாட்டினுடைய பாதுகாப்பு மட்டுமல்ல, உலகத்தின் பாதுகாப்பும் குலைந்து போகும்."

'ஜனநாயகம் என்பது, மக்களால் — மக்களுக்காக — மக்களாலேயே நடைபெறும் ஆட்சி என்று சொல்லப்படுகிறது. மக்களின் ஆட்சியானது மக்களிடையேயுள்ள சிறந்த திறமைசாலிகளாலேயே நடத்தப்பட வேண்டும். அப்போதுதான் ஜனநாயகம் வெற்றி பெற முடியும்."

மேலும் டாக்டர் லட்சுமணசாமி முதலியார் தொடர்ந்து பேசுகையில், மாணவர்களிடையே ஒழுங்கு முறைகாணப்பட வேண்டிய அவசியத்தைப் பற்றி எடுத்துக் கூறினார்.

கழகச் செய்திகள்

பொன்மலைப்பட்டி தி. மு. கழகம்

6—7—54 செவ்வாய் மாலை கழகக் காரியாலயத்தில் தோழர் கைலாசம் தலைமையில் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. அது சமயம் பல தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

பழனி தி. மு. கழகம்

17—7—54 சனிக்கிழமை பழனி தி. மு. கழக பொதுக்குழு உறுப்பினர்கள் கூட்டம் தி. மு. கழக கட்டிடத்தில் மதுரை எஸ். முத்து அவர்கள் தலைமையில் கூடி, செயலாளர்: துரை அரசு; விளம்பர உறுப்பினர்: பரமசிவம் ஆகியோர்களை மேற்படி பதவியிலிருந்தும் செயற்குழு பிரதம அங்கத்தினர் ஆகிய பதவியிலிருந்தும் விலக்குவதென முடிவுசெய்யப்பட்டது. மேற்படி செயலாளர் பதவிக்கு பி. கன்னையா அவர்களும், விளம்பர உறுப்பினர் பதவிக்கு மா.மாணிக்கம் அவர்களும் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கடையநல்லூர் தி. மு. க.

5—7—54 இரவு 8 மணியளவில் தோழர் கந்தசாமி தலைமையில் செயற்குழு அவசரக் கூட்டம் நடைபெற்றபோது, இக்ககரில் வீட்டுவரி செலுத்த இயலாமல் அன்புறும் ஏழை மக்களுக்கு 1954 செப்டம்பர் முடிய உள்ள அரை ஆண்டு வீட்டு வரியை ரத்து செய்யுமாறு நகராட்சி மன்றத்தாரை வற்புறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மகஜர்மூலம் நகராட்சி மன்றத்துக்கு அனுப்பப்பட்டது.

வியன்னு:

சோழவந்தான் தி. மு. க.

15—7—54ல், பன்னீர்செல்வம் நினைவுப் படிப்பக இரண்டாவது செயற்குழு கூட்டம் தோழர் நாராயணன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் வரவு—செலவு கணக்குகள் சரி பார்க்கப்பட்டது. மும்முனை போராட்டத்தில் ஈடுபட்டு அடக்குமுறைகளை ஏற்ற அறப்போர் வீரர்களைப் பாராட்டியும், தூத்துக்குடி கல்லக்குடி துப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டித்தும், அறப்போரில் ஈடுபட்டு உயிர் துறந்த தோழர்களின் குடும்பங்களுக்கு சர்க்கார் நஷ்டஈடு தருமாறு கோரியும், இவ்வழக்குகளை வாபஸ் வாங்குமாறு முதன் மந்திரி காமராசரை கேட்டுக்கொண்டும், கல்வித் திட்டத்தை ஒழித்த காமராசரைப் பாராட்டியும் மணப்பாறை தோழர் குமாரவேல் மறைவிற்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நெய்யல் தி. மு. கழகம்

15—7—54ம் கழகச் சார்பில் நடைபெற்றது. கீழ்க்கண்ட கழகச் செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர்: கொ. செ இலக்குமணன்; பொருளாளர்: எம் செல்லப்பன்; துணைச் செயலாளர்: கே ராமசாமி; உறுப்பினர்கள்: என். செங்கோட்டையா, பொன்னுசாமி, கா. ராமசாமி, செங்கோட்டையா, கிருஷ்ணசாமி, என். என். ஐப்புலிங்கம், என். கே. வேலுசாமி, என். கே. ஆறுமுகம், என். கே ஜி செல்லப்பா, என். கந்தசாமி, என். கே. செல்லப்பன், ஆறுமுகம், பழனியப்பன், எம். வேலுசாமி, என். பி ஐயாச்சாமி, ராமசாமி, ம பழனிச்சாமி, கெ. பொன்னுசாமி, கே. கந்தசாமி, கொ. செ பழனிவேல், நல்லுசாமி, அ கருப்பையா, க. ராமசாமி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை (20வது வட்டம்) தி. மு. கழகம்

18—7—54 ஞாயிறு காலை 11-மணிக்கு கிளைக் கழகச் செயலாளர் வெ.பா. ஏகாம்பரம் தலைமையில் நடைபெற்றபோது உறுப்பினர்கள் கூட்டத்தில் தோழர் கு. அருள்மொழி அவர்கள் துணைச் செயலாளராக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

எட்டயபுரம் தி.மு. கழகம்

எட்டயபுரம், ஜூலை 15—

எட்டயபுரம் தி மு கழக உறுப்பினர்கள் கூட்டம் என். தேவன் தலைமையில் நடைபெற்றது. எட்டயபுரம் பகுதியில் கழகம் அமைய வேண்டிய அவசியம் குறித்தும், ஏனைய ஆக்க வேலைகள் பற்றியும், ஆலோசனைகள் நடத்தப்பெற்ற பிறகு கழகம் அமைக்கப்பட்டு கீழ்கண்டவர்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர் ஈ. கே திராவிடன்; உதவிச் செயலாளர் எம். வேல்சாமி; பொருளாளர் சுப்ரமணியன்; விளம்பர உறுப்பினர் எம் லவாலன்; மாவட்டப் பிரதிநிதி என். தேவன்; மற்றும் 9 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

சந்தைப்பாளையம் தி. மு. (கிளை) கழகம்

செங்கம் வட்ட தி. மு. கழக அமைப்பின் கூட்டம் 18-7-54 ஞாயிறு காலை செங்கம் தோழர் அ. கண்ணன் அவர்கள் கடையில், தோழர் என். என். ராஜன் தலைமையில் நடைபெற்றது. புதுப்பாளையம், செங்கம், மேல்பள்ளிப்பட்டு, பரமனந்தல் ஆகிய இடங்களிலிருந்து கழக அபிமானிகளும், உறுப்பினர்களும் வந்து கலந்துகொண்டனர். தலைவர், கழகம் இல்லாத இடங்களில் உடனடியாக உறுப்பினரைச் சேர்த்து மத்திய தி. மு. கழகத்துடன் தொடர்புபடுத்திக் கொண்டு வட்டக் கழகம் நிறுவ வேண்டியஅவசியம்பற்றி பேசினார்.

மேலணிக்குழி தி. மு. க.

உடையார் பாளையம் வட்டத்தைச் சேர்ந்த மேலணிக்குழி கிராமத்தில் 13—7—54 செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு தோழர் எம் கோவிந்தன் தலைமையில் தி மு கழகத் துவக்க விழா பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் தில்லை கிள்ளைவன், லால்பேட்டை இராமலிங்கம், அழகேசன், வரதராசன் முதலியோர் சொற்பொழிவாற்றினார்கள். பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பம்பாய் தி. மு. கழகம்

பம்பாய் தி. மு. க. செயற்குழுக் கூட்டம் 11—7—54 ஞாயிறு மாலை 7 மணி அளவில் கழக அலுவலகத்தில் படிப்பக நிர்வாகி தோழர் தோ. இ செல்லையா தலைமையில் நடைபெற்றது. நடந்த கூட்ட நிகழ்ச்சிகள், வரவு செலவு கணக்குகள் முதலியன பரிசீலனை செய்யப்பட்டன. படிப்பக நிர்வாகியாக தோழர் புத்தரசு அவர்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பூனா தோழர் கருப்பாசன் அவர்களின் துணைவியார் இறந்ததை பெருந்துயரமைக் குறித்தும், மணப்பாறை தோழர் குமாரவேல் அவர்கள் மறைவு குறித்தும் அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தஞ்சாவூரில் 'நம் நாடு' விற்பனையாளர்

வி நட்சணமூர்த்தி,
சண்முகானந்தா ரைஸ் மில்,
பென்னிங்டன் ரோட்,
தஞ்சாவூர்.

உலக அரங்கில்

பாரிஸ் :

ஜினிவாவிலிருந்து திரும்பிய பிரெஞ்சுப் பிரதமர் மெண்டே பிரான்சுக்கு, சிறந்த முறையில் வரவேற்பு அளிக்கப்பட்டதாம். பாரிஸ் விமான நிலையத்திலிருந்து நகரின் மத்தியில் உள்ள சர்க்கார் காரியாலயம் வரையில் ஏராளமான மக்கள் அணிவகுத்து நின்றார்களாம்.

சியோல் :

இந்தோ சீனப் போர் நிறுத்தம், தென் கொரியாவில் கம்யூனிஸ்டுகளின் படையெடுப்பு ஏற்படுமளவு ஆபத்தானது என்று தென் கொரிய பாதுகாப்பு அமைச்சர் சோன்வோன் கூறினார்.

ஜார்ஜ்டவுன் :

சிறையில் உள்ள கயானா மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ஜகனையும் மற்ற மூன்று பேரையும் ஜார்ஜ்டவுனிலிருந்து 95 மைல் தூரத்தில் உள்ள ஒரு சிறைக்குக் கொண்டு சென்றனர். சிறைக் கைதிகளின் மனதை மாற்ற, டாக்டர் ஜகன் முயன்றார் என்று குற்றம் சாட்டி, அவரை மற்ற கைதிகளிடமிருந்து பிரித்து வைக்க கயானா சர்க்கார் முடிவு செய்திருந்தது.

லண்டன் :

சோவியத் வெளிநாட்டமைச்சர் மாலடோவ் ஜினிவா மகாநாடு முடிந்ததும் நேராக மாஸ்கோ திரும்பிவிட்டார் என்று, மாஸ்கோ வானொலி அறிவித்தது.

* * *

ஜினிவா மகாநாட்டிலிருந்து திரும்பிய பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் ஈடன் பிரிட்டிஷ் அரசியைச் சந்தித்துப் பேசினார்.

ஜினிவா :

சீனாவில் கைது செய்யப்பட்டு, சிறை வைக்கப்பட்டுள்ள எட்டு அமெரிக்கர்களை விடுவிக்கும் என்று அறிவித்தது. இதுபோலவே, அமெரிக்கா, பதிலுக்கு சீனர்களை விடுதலை செய்யுமென்று அறிவிக்கப்பட்டது.

லிஸ்பன் :

போர்ச்சுகீசிய உயர்நீதி மன்றத்தால் தண்டிக்கப்பட்ட போர்ச்சுகீசிய விடுதலை விரும்பியான டாக்டர் கைதான்டே, தண்டனையை எதிர்த்து அப்பீல் செய்திருக்கிறார். 12 ஆண்டுகள் அரசியலில் பங்கு கொள்ளக் கூடாது என்று அவருக்கு தண்டனை அளிக்கப்பட்டிருக்கிறது.

போன் :

மேற்கு ஜெர்மனியின் ஒற்றர் பகுதியின் தலைவரான டாக்டர் ஓட்டோ ஜான் என்பவர் காணப்படவில்லையாம். அவர் சோவியத் ஜெர்மனிக்கு கடத்திச் செல்லப்பட்டிருப்பார் என்று நம்பப்படுகிறது.

வாஷிங்டன் :

பிரிட்டன், அமெரிக்கா, மற்றும் கம்யூனிஸ்டு அல்லாத நாடுகள் பல, இலைகள் அனைத்தும் அடுத்த மாத இறுதியில் மகாநாடு ஒன்று கூட்டி, தென் கிழக்கு ஆசிய பாதுகாப்பு ஒப்பந்தம் பற்றிப் பேசுவார்கள் என்று தெரிகிறது.

மெல்போர்ன் :

தெ. கி ஆசிய ஒப்பந்தம் பற்றி ஆஸ்திரேலியா மிக்க நம்பிக்கையுடன் இருக்கிறது. இந்தோ சீனாவுக்கு ஆஸ்திரேலியா அனுப்புகிற அமைப்பு ஆகிய சமாதானத்தைப் பாதுகாக்க விரும்புகிறது என்று தெரிகிறது.

சைகோன் :

ஜினிவாவில் ஏற்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் பற்றி வியட்நாம் தலைநகரான சைகோன் மக்கள் பரபரப்படையவில்லை.

டோக்கியோ :

கொழும்பு மாநாட்டின் எதிரொலிதான், இந்தோ—சீனப் போர் நிறுத்தம் என்று கூறி ஜப்பானிய இடதுசாரி சோஷலிஸ்டு கட்சி, கொழும்பு மாநாட்டை நடத்திய நாடுகளைப் பாராட்டியிருக்கிறது.

கோலாலம்பூர் :

மலேயா பயங்கரவாதிகள், பாதுகாப்புப் படையைச் சேர்ந்த விமானமொன்றை சுட்டனர் என்று தெரிகிறது. பயங்கரவாதிகளின் ஆறு ஆண்டு கிளர்ச்சியில் இப்படி நடைபெறுவது இதுவே முதல் தடவை என்று தெரிகிறது.

சால்ட்லேக் நகரம் :

அமெரிக்காவின் வெளிநாட்டு உதவிகள் அரசியல் சட்டத்திற்கு விரோதமானவை என்று கருதும் உட்டா ஸ்டேட்டின் கவர்னர் ஜே பிராக் லீ, அமெரிக்க உயர்நீதி மன்றத்தில் இது பற்றி வழக்குத் தொடருவார் என்று தெரிகிறது.

நியூயார்க் :

அணு, மற்றும் இதர பேரழிவு ஆயுதங்கள் ஒழிப்பு பற்றி தனது கருத்தைத் தெரிவிக்குமாறு ஐ. நா. சபையின் போர்த் தளவாட ஒழிப்புக் கமிஷன், இந்தியாவைக் கேட்டுக் கொண்டிருக்கிறது. இந்தியா இக்கமிஷனில் உறுப்பினராக இல்லை என்பது குறிப்பிடத் தக்கது.

மாஸ்கோ :

இந்தோ-சீனப் போர் நிறுத்தமானது நீர்க்கப்படாத பல அகில உலகப் பிரச்சினைகளைத் தீர்க்க வழி செய்கிறது என்று சோவியத் பத்திரிகையான 'பிராவ்தா' எழுதியிருக்கிறது.

கொழும்பு :

அனுமதியின்றி ஏற்பட்டதென்றிருந்த வியாபாரம் செய்ய இலங்கை அல்லாதாருக்கு லைசென்ஸ் வழங்குவது கூடாது என்று இலங்கை வர்த்தக அமைச்சராலயம் உத்தரவிட்டிருக்கிறது. 500 இலங்கை அல்லாதார் தேயிலை விற்பனைக்கு லைசென்ஸ் கேட்டிருக்கிறார்களாம்.

அங்காரா :

பால்கன் ஒப்பந்தம் பற்றிய கிரேக்க, துருக்கி, கிரீஸ், யூகோஸ்லேவியா நாடுகளின் பிரதமர்கள் மாநாடு நடத்த, தேதி நிச்சயிக்கப்பட்டு விட்டது என்று துருக்கிப் பிரதமர் அறிவித்தார்.

தி. மு. கழகத் தோழர்கள் மீது வழக்கு

சென்னை, ஜூலை 22—

5-வது வட்ட தி. மு. கழகத் தோழர்கள் ஜூலை 15-ம் மும்முனைப் போராட்ட வெற்றி விழா கிழக்கிய வீதியில் எழுதிய குற்றத்திற்காக அனைவரும் கைது, இருவருக்கும் தலா 10 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. அதிலே தோழர் சி. ஆர். பாலசுந்தரம், பல்மொழியன், வரவரம்பன், இளந்தினகாமி ஆகிய நால்வரும், மீண்டும் வீதியில் எழுதினதாக இன்று வழக்கு தொடரப்பட்டது. வழக்கில் வரவரம்பன் வராமையினால் இவ்வழக்கை இம்மாதம் 29-ந் தேதி தள்ளிவைக்கப்பட்டது. இன்று வரவரம்பன் வழக்குக்கு வராததால் கோர்ட்டார் வாரண்ட் பிறப்பித்துள்ளனர்.

தோழர் சிறை சென்றார்

சென்னை, ஜூலை, 22—

1-வது வட்ட தி. மு. கழகத் தோழர், திராவிடமணி. ஜூலை 15-ம் வெற்றி விழா நிகழ்ச்சியை வீதியில் எழுதின குற்றத்திற்காக இன்றைய தினம் 10 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டார். தோழர் அபராதம் கட்ட மறுத்து சிறை சென்றிருக்கிறார்.

மயிலை தி. மு. க. பொதுக் கூட்டம்

★

அண்ணாதுரை பேசுவார்

25—7—54 மாலை 5 மணிக்கு, சென்னை, மயிலை, கபாலீஸ்வரர் சன்னதித் தெருவில், தோழர் அ. பொன்னம்பலனார் தலைமையில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் நடைபெறும். பொதுச்செயலாளர் அண்ணாதுரை சொற்பொழிவாற்றுவார். தோழர் நாகூர் அனீபா இயக்கப் பாடல்கள் பாடுவார்.

சென்னை மாவட்ட திராவிடர் கழக இரு மாநாடுகள்

24—7—54 காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை புத்தர் கொள்கை பிரசார மாநாடு சென்னை ஒற்றைவாடை தியேட்டரில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில் நடைபெறும்.

25—7—54 காலை 9 மணி முதல் பகல் 2 மணி வரை திராவிடர் கழக மாநாடு தோழர் தி. பொ. வேதாசலம் தலைமையில் நடைபெறும்.

சென்னைத் திருவள்ளுவர் கழகம்

24—7—54 மாலை 6½ மணிக்கு புரசை அன்னதான சமாஜ மண்டபத்தில் தோழர் இராம. மீனாட்சிசுந்தரம் அவர்கள் 'திருக்குறளில் காணும் கோயும் மருந்தும்' என்பது பற்றி பேசுவார்.

பொதுக்கூட்டம்

25—7—54 மாலை 6 மணிக்கு 7-வது வட்டம் மூலக்கொத்தளத்தில், தாமரைப்பேட்டை மீண்டும் கடந்தது போன்ற தோழர் எல். எம். சண்முகம் பரம் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் என். வி. நடராசன், பி. எம். பாலசுப்பிரமணியம், என். ஜீவரத்தினம், சி. ஆர். பாலசுந்தரம், ஆர். ஜார்ஜ் ஆகியோர் பேசுவர்.

சிறப்புக் கூட்டம்

25—7—54 மாலை 6 மணிக்கு பெரம்பூர் பகுதி புதுப்பட்டி ரோடு மைதானத்தில் இந்நகர் பகுத்தறிவு முன்னேற்றக் கழகச் சார்பில் தோழர் இராம. செல்லக்கண் தலைமையில் சிறப்புக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் சி. பி. சிற்றரசு, மு. இளஞ்செழியன், முத்துகருலிங்கன், நல்லமணியம் ஆகியோர் பேசுவர்.

சென்னை 6-வது வட்ட தி. மு. கழக பொது உறுப்பினர்கட்கு

25—7—54 காலை 8-30 மணிக்கு, கழக இல்லத்தில், தி. மு. கழக சென்னை மாவட்ட செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

சென்னை 10-வது வட்ட தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

25—7—54 காலை 10 மணி அளவில் 83, தையப்ப முதலி தெருவில் செயற் குழுக் கூட்டம் நடைபெறும்.

சென்னை 17-வது வட்ட செ. கு. உறுப்பினர்கட்கு

25—7—54 காலை 9-30 மணியளவில் கழக மனையில் செயற் குழு கூடும். அதுசமயம் பல பொருள்களைப் பற்றி விவாதிக்கப்படும்.

கழகக்கூட்டங்கள்

★

வீதிவிடங்கன்

24—7—54 மாலை 6 மணிக்கு
தலைவர்: டி. என். ராசரேத்தினம்
பேசுவோர் :
சி. பி. சிற்றரசு
டி. எம். ரத்தினம்
சி. தங்கவேலன்

★

மீஞ்சூர்

25—7—54 மாலை 5 மணிக்கு
தலைவர் : எம் கேசவன்
பேசுபவர் :
காஞ்சி. கல்யாணசுந்தரம்

★

திருவள்ளூர்

இரயில் நிலையத்திற்கு அருகில் இருக்கும் பெரிய குப்பம் அருகில்
25—7—54 மாலை 6 மணிக்கு
தலைவர்
வி. எஸ். கோவிந்தராசன்
பேசுவோர் :
அருண்மொழி
டி. ஆர் வரதன்
பி நாராயணன்

★

அருப்புக்கோட்டை

வெள்ளைக்கோட்டை தெற்கு ரத வீதியில்
25—7—54 மாலை 7 மணிக்கு
பேசுவோர் :
எஸ் முத்து
எம் எஸ். ராமசாமி
சிவ சண்முகசுந்தரன்
சு காளிமுத்து
சு. நடராசன்

மாநாடு

25—7—54 மாலை 2 மணிக்கு அடியாரத்தம் லட்சுமி டாக்கீசில் வட ஆற்காடு மாவட்ட வர்த்தகர்கள் இரண்டாவது மாநாடு நடைபெறும். பல பிரமுகர்கள் பேசுவர்.

ஒய். எம். டி. ஏ. (ஆங்கில மன்றம்)

21—7—54 அன்று நடைபெறுவதாயிருந்த மன்றத்தின் அமைப்புக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கூட்டம் 25—7—54 ஞாயிறன்று காலை 10 மணிக்கு இராயப்பேட்டை டாக்டர் பெசண்ட் ரோடு? ... தோணி தெரு எண் 5 உள்ள இல்லத்தில் நடைபெறும்.

ராஜவீரா பேட்டி......

(1-ம் பக்கத் தொடர்ச்சி).

சேர்ந்து அமைக்கப்படுகிற ஒரு அரசியல் அமைப்பு தென்னாட்டவரை அடிமை கொள்ளும் ஆதிக்க அரசியல் அமைப்பாகத்தான் இருக்கக் கூடும் என்று நாங்கள் கருதுகிறோம். இதில் தவறு என்ன? இது அரசியல் ஆதிக்கம்; பொருளாதாரத் துறையில்.........

ர. வீ. :—இன்று உங்களை ஆள்பவர் திரு. காமராசர் தானே. அப்படி இருக்கையில், உங்கள் மீது வடநாட்டவர் ஆதிக்கம் செலுத்துவதாகச் சொல்கிறீர்கள்; வேடிக்கையாக இருக்கிறது.

ப :—காமராசர் ஆள்கிறார்; அவர் எங்கள் நாட்டவர்தான். ஆனால், அவருக்கு, இந்த நாட்டை ஆளும் அதிகாரத்தைத் தந்தவரோ, மறுக்கவோ, உயர்ந்த, பலம் வாய்ந்த அதிகாரத்தைப் படைத்திருப்பவர் கவர்னர்தானே. அந்தக் கவர்னர் வடநாட்டவர். மேலும் அந்த கவர்னருக்கும் அதிகாரம் தரப்படுவதும், அவரை நியமிக்கவும், நீக்கவும் ஆன அதிகாரங்களையும் வைத்திருப்பது வடநாட்டவர்தானே?

(தொடர்ந்து வெளிவரும்)

செய்திக்கதிர்

பர்மிட் முறை

கொழும்பிலிருந்து இந்தியாவுக்கு வருவதை ஒழுங்கு படுத்துவதற்காக, இந்திய சர்க்கார் பெர்மிட் முறையைச் சீக்கிரத்தில் கொண்டு வருவார்கள் என்று தெரிகிறது.

தண்ணீர் வினியோகம்

நகரப் பகுதிகளின் குடித் தண்ணீர் தேவைக்காக இந்திய சர்க்காரிடமிருந்து ரூ 2 கோடி, சென்னை சர்க்கார் எதிர்பார்க்கிறதாம். இந்திய சர்க்கார் எழுப்பியுள்ள கடன்களிலிருந்து இத்தொகை வழங்கப்படுமென்று தெரிகிறது.

மான்யம்

சென்னை ராஜ்யத்தில் தேசிய விஸ்தரிப்புத் திட்டங்களின் கீழ் வராத பிரதேசங்களில், சாலைகள், தண்ணீர் வினியோகம் போன்ற வேலைகளுக்காக இந்திய சர்க்கார் ரூ 58 லட்சம் மான்யம் வழங்கியிருக்கிறது.

மறியல்

போளூர் ரயில் நிலையத்தில் திருமலைராயன்பட்டினம் தேசிய இளைஞர் காங்கிரசார் சார்பில் அவர்களின் 'ரயில் முன் மறியல்' ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

வேலை நிறுத்தம்

பணி முடிந்தது கிட்டத்திற்கு தொழிலாளர்கள் தங்கள் வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற்றுக் கொண்டனர் என்று தெரிகிறது. காண்ட்ராக்டர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் சமரசம் ஆகிவிட்டதாம்.

தொழில் புரட்சி

நெய்வேலியில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியின் மூலம் தொழில் அளவில், தென் இந்தியா மகத்தான முன்னேற்றமடையும் என்று இந்திய சர்க்கார் நிதி அமைச்சர் தேஷ்முக் கூறியுள்ளார்.

புகையிலை

1953-ல் விளைந்த இந்தியப் புகையிலையில், சீனா 2,000 டன் வாங்கும் என்று நூற்பு தொழில் அமைச்சர் காரியாலயச் செய்தி கூறுகிறது.

பயிற்சி முகாம்கள்

சென்னை ராஜ்யத்தில் கிராம சேவகர்களுக்குப் பயிற்சி அளிக்க 6 புது முகாம்களை ஆரம்பிக்க சென்னை சர்க்கார் முடிவு செய்துள்ளனர்.

களவு

பீஹார் ராஜ்யப் போலீஸ் கோஷ்டி ஒன்று அத்துமீறி நுழைந்து ராஜ்ய சர்க்கார் காரியாலயமொன்றில் நுழைந்து, சில தஸ்தாவேஜுகளை எடுத்துச் சென்றனர் என்று தெரிகிறது.

வெள்ளம்

கோசி ஆற்றில் வெள்ளப் பெருக்கால், வடகிழக்கு பீகாரில் உள்ள 30,000 ஏகர் நிலத்தில் உள்ள பயிர்களுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது.

தூதுக்குழு

சோவியத் விவசாயக் கண்காட்சியைப் பார்க்க இந்தியாவிலிருந்து இருவர் கொண்ட தூதுக் குழு ஒன்று மாஸ்கோ செல்லுமாம். அக் குழுவில் ஒருவராக இந்திய சர்க்கார் அமைச்சர் ஒருவர் செல்வார் என்று தெரிகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால், அறிவகம் அச்சகத்தில் அச்சிட்டு பெற்று (16, ஜெனரல் முத்தையா முதலி தெரு?, திராவிடநாடு) வெளியிடப்பட்டது. ஆசிரியர் : சி. என். அண்ணாதுரை, எம். ஏ.